பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

17 11 2024 **SUNDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள் -தலைப்புச் செய்திகள்</u>

1. பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல் போன்ற சவாலான பிரச்சினைகளை எதிர்கொள்வதில் இந்தியாவும் - நைஜீரியாவும் இணைந்து செயல்படுவதென முடிவு செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஜவுளி உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

3. தொழில் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

4. கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு ஐ பெரியசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

5. தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>>

நைஜீரியா நாட்டுடனான நட்புறவுக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக நைஜீரியா சென்றுள்ள அவர், இன்று அந்நாட்டு அதிபர் திரு. **Bola Ahmed Tinubu**-ஐ சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அப்போது, பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற சவாலான பிரச்சினைகளை இருநாடுகளும் இணைந்து எதிர்கொள்வதென முடிவு செய்யப்பட்டதாக பிரதமர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, அந்நாட்டு அதிபர் அளித்த சிறப்பான வரவேற்புக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்நாட்டு மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் 20 டன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பிவைத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினராக நைஜீரியா இணைய உள்ளதற்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர், அங்குள்ள இந்திய வம்சாவளியினரிடையே பிரதமர் கலந்துரையாட உள்ளார்.

தனது பயணத்தின் இரண்டாவது கட்டமாக பிரேசில் நாட்டுக்கு செல்லும் அவர், அங்கு நடைபெறவுள்ள ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இம்மாநாட்டில் பிரதமர், பல்வேறு உலகளாவிய பிரச்சினைகளில் இந்தியாவின் நிலை குறித்து விரிவாக எடுத்துரைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமது பயணத்தின் மூன்றாம் கட்டமாக பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் கயானா செல்கிறார்.

<<<<<<>>>>>>

ஜவுளி உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த தரமணியில் அமைந்துள்ள தேசிய ஆடை வடிவமைப்பு கல்வி நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

இந்த கல்வி நிறுவனம் திறமையான மாணவர்களை உருவாக்குவதில் முன்னோடியாக உள்ளது என்று அவர் கூறினார்.

ஜவுளி மற்றும் ஆடை வடிவமைப்பை ஊக்குவிக்கும் வகையில், **‘Vision Next ’** எனும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜவுளி உற்பத்தியின் சந்தை மதிப்பு வரும் 2030-ஆம் ஆண்டில் 350 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

விருதுநகரில் ஜவுளிபூங்கா தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் இந்தியா உலக அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் வேலப்பன்சாவடியில் உள்ள தனியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், சுயசார்பு இந்தியாவின் இலக்கை அடையும் வகையில் மத்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

*(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 37 செகண்ட்ஸ்)*

தொழில் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி பணிகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்டந்தோறும் மருத்துவக்கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருவதாகவும், கடந்த பத்தாண்டுகளில் எய்ம்ஸ் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 23-ஆக அதிகரித்துள்ளது என்றும் திரு எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

திண்டுக்கல்லில் கூட்டுறவு வார விழாவையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அமைச்சர்கள் திரு சக்ரபாணி மற்றும் திரு பெரியசாமி ஆகியோர் கலந்துகொண்டு, மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினர்.

அனைத்துப்பொருட்களும் குறைவான விலையில் தரமானதாக வழங்க வேண்டும் என்ற நோக்குடன் கூட்டுறவுத்துறை செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு மாநில அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் காலியாக உள்ள மருத்துவப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் ஒரு கோடிய 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவ கட்டிடங்கள் மற்றும் மருத்துவப்பிரிவுகளை இன்று அவர் திறந்துவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருத்துவமனைகளில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 553 பணியிடங்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி தேர்வு நடத்தப்பட்டு, 100 சதவீதம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவித்தார்.

இந்த தேர்வுகளை ஆன்லைன் மூலம் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் முதல் முறையாக நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பெண் மருத்துவர் மற்றும் பணியாளர்களுக்கான ஐந்து ஓய்வறைகள் கொண்ட இளஞ்சிவப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>>>

அரியலூர் மாவட்ட அஞ்சல் துறை சார்பில் தூய்மையே சேவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இன்று பேரணி நடைபெற்றது.

இதில் அஞ்சலக அதிகாரிகள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ராம்குமார் - 35 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

சேலம் விமான நிலைய விரிவாக்கப்பணிகளை விரைவுபடுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நிலம் கையப்படுத்துவதில் உள்ள சிக்கல்களுக்கு உரிய தீர்வுகாணப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் பெரும்பாலான இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(வாய்ஸ் பைட் - செந்தாமரை கண்ணன் - 34 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவெரும்பூரில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாமை மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று ஆய்வு செய்தார்.

-------------

சேலம் ராஜகணபதி திருக்கோவிலில் சுமார் 25 லட்சம் ரூபாய் செலவில் மண்டபம் கட்டுவதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.

-------

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாமை ஆட்சியர் திருமதி அழகுமீனா நேரில் ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பீஹாரின் **Rajgir-**ல் நடைபெற்ற ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

-------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் ஹரியானா – தமிழக அணியையும், ஜெய்ப்பூர் - புனே அணியையும் எதிர்கொள்கின்றன.

***<<<<<END>>>>>>***